புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியல் அன்றும் இன்றும்
பிரித்தானியாவிலே வாழும் தமிழர்கள்

- பாவலர் கந்தையா இராஜமனோகரன்

மண் கேட்ட தமிழரிலே ஏறத்தாழ அரைவாசிப் பேர் அரச பயங்கரவாதத்தாலே சொந்த மண்ணைவிட்டுப் பிரிந்தோம். பிறர் மண்மீது சிதறி வாழ்கின்றோம். எம்மோடு வேறு பல நாட்டுத் தமிழரும் வேறு பல காரணங்களுக்காக வாழ்கின்றனர். இவ்வாறு பிரித்தானியாவிலே வாழும் தமிழரைப் பற்றிய செய்திகளே இக்கட்டுரையினுடைய கருப் பொருள். இது ஈழத்தவர், இந்தியர், மலேசியர், மொறிசியர்,தென்னாப்பிரிக்கர், பர்மியர் எனவுள்ள யாவரையும் உள்ளடக்கியது. தம்மைத் தமிழராகக் காட்ட முற்படாது வாழும் தமிழரையும் அடக்கும். இசுலாமியர் என்று தம்மை மதஞ் சார்ந்து பிரிந்து நிற்போரையும் இங்குத் தமிழரெனவே காட்டுகிறேன். தமிழர் என்பது மதம் சார்ந்த தன்மையல்ல. மொழியை மட்டும் சார்ந்தது. தமிழருள்ளே எம்மதத்தவரும் இருக்கலாம். மதஞ் சாராமற் கடவுளை நம்பும் ஆன்மிகவாதியும் இருப்பார். கடவுட் கொள்கை மறுப்பாளரும் இருப்பர். இவ்வாறான எத்தன்மைகளும் எம்மைப் பிரிக்கா.

பிரித்தானியாவிலே வாழும் தமிழராகிய எமது அன்றைய நிலை, இன்றைய யதார்த்தம், நடந்துவந்த பாதை, இனி நடக்கவுள்ளன பற்றிய ஊகம் போன்ற யாவுமே இக்கட்டுரையிலே கலந்திருக்கும்.

தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படைத் தன்மைகள், அவற்றின் மீதான பிடிப்பு, அவற்றைப் பேணுவதற்கான தேவை, பேணுவதிலுள்ள உறுதி போன்ற யாவுமே கட்டுரைக்கு அணி சேர்ப்பன.

புண்ணை மூடிப் புனுகு பூசி விடுவது கட்டுரையின் நோக்கமல்ல. நாளடைவிலே புண்பட்ட உறுப்பு அழுகிவிடும். புண்ணுள்ள இடத்தை வெட்டிப் பார்த்து உண்மையை உணரத் தலைப்படுவோம். அழுகிய புண்ணின் மேலிடும் மருந்து காயத்தை ஆற்றாது. அதனைத் தூய்மைப்படுத்திப் புதுக்காயம்போல குருதிவரச் செய்து அதன்பின் மருந்திடுவோம். உடன் ஆறும். நோகுந்தான். ஆனால் விரைவிலே ஆறிவிடும்.

ஆனாலும் தனிப்பட்ட எவருடையதோ அல்லது நிறுவனத்தினுடையதோ பெயர்களை இக் கட்டுரையிலே இணைக்கலில்லை. குறைபாடுகளைக் கூறியுள்ளேன். தொப்பி அளவானவர்கள் இட்டுக் கொள்ளுவோம். எழுதியவரை நோகாமல் எம்மைத் திருத்த முயல்வோம்.

ஈழத்தமிழர்

ஈழத் தமிழர் உலகத் தமிழர் ஆகியதாலே ஏற்பட்ட சிக்கல்கள், இழப்புகள் என்பனவும் பற்பல. விளைந்த நன்மைகளும் உள. முக்கிய நன்மைகளில் வேற்று நாடுகளிடம் கையேந்தாத நிலையிலே ஈழப் போரட்டம் அமைய வழி பிறந்தமை தலையாயது. இதனாலே எமது தலைவனும் விலைபோகவில்லை. விடுதலை இயக்கமும் விலைபோகவில்லை. தமிழரின் அன்புக்கு மட்டும் கட்டுப்பட்ட தலைவனைப் பெற்ற நாம் உயர வழி கிடைத்தது. மேலும், ஏனைய நாட்டுத் தமிழ் உறவுகளோடு இணைந்தமையும் நன்மைதானே.

இன்று உலகத் தமிழரினுடைய தொகை ஏறத்தாழ எண்ணுற்றைம்பது நூறாயிரம் (எட்டரைக் கோடி) என்பர். இதிலே ஏறத்தாழ முந்நூற்றைம்பதினாயிரம் பேர் பிரித்தானியாவிலே உள்ளோம். இதிலே இருநூறாயிரம் பேர் ஈழத்தவராவார். மொத்த உலகத் தமிழரிலே அரை விழுக்காட்டிலும் குறைவானவரே பிரித்தானியத் தமிழர் ஆகும்.

பிரித்தானியத் தமிழர்

அன்றைய பிரித்தானியர் ஈழத்தவரை அடிமை கொண்டு ஆண்டவரிலே மூன்றாமவர். போத்துக்கேயரிடமே 1619 இலே ஈழத்து இறைமை பறிபோனது. அவர்களை ஒல்லாந்தர் தோற்கடிக்க எமது இறைமை அவர்களிடம் கைமாற்றப்பட்டது. அதே வகையிலே பின்னர் பிரித்தானியரிடம் கைமாறியது. திருகோணமலை போன்ற சிலபகுதிகள் மிகச் சிறிய காலவெல்லைகள் மட்டும் பிரான்சின் வசமும் இருந்தன. பிரித்தானியரே 1815 வரை வெல்லப்படாத கண்டியரசையும் வென்றவர். இவர்களே, தீவிலிருந்த வெவ்வேறான மூன்று நாடுகளையும் 1833 இலெ தமது ஆளும் செயன்முறை வசதிக்காக இணைத்து ஒரு நாடாக்கியவர்கள். பின்னர், விடுதலை என்ற பெயரிலே 1948 இலே ஒரு நாடாகத் தமிழரின் உரிமை சிங்களவரின் கைக்குச் சென்றது.

பிரித்தானியர் எம்மை ஆளத் தொடங்கியதும் எம்மவரும் இங்கு வரத் தொடங்கினர். தொடக்கத்திலே கல்விக்கென மட்டுமே வந்தனர். பின்னர் மேற்கல்வி, தொழில் நாகரிகம், வசதிகள், பணம், பெண் , காதல் போன்ற ஒன்றிலோ பலவற்றிலோ மயங்கிப் பலரும் இங்கேயே தங்கத் தொடங்கினர். இத்தொகை ஆண்டு தோறும் அதிகரித்தது. 1980 ஆம் ஆண்டளவிலே ஏறத்தாழ ஐம்பதாயிரம் (50 000) தமிழர் வரையிலே பிரித்தானியாவிலே வாழ்ந்தனர். 1983 ஆடி மாதம் ஈழத்தவருக்குக் கறுப்பு ஆடி. அரசின் ஆசியோடு புத்த பிக்குகளின் வழிகாட்டலிலே அரசபடையினர் பார்த்திருக்கத் தமிழர்கள் அழிக்கப்பட்டனர். உயிரோடு எரிக்கப்பட்டனர். பெண்கள் மிருகத்தனமான பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். தமிழர் சொத்துக்கள் சூறையாடப்பட்டு எரியூட்டப்பட்டன. இதன்போதும் இதனைத் தொடர்ந்த அரசப் பயங்கரவாதத்தாலும் ஈழத்தவர் உலகெங்கும் சிதறியவண்ணம் உள்ளனர். இன்றுவரை இது தொடர்கதை. 1983 ஆடியின் பின்னர் பிரித்தானியத் தமிழர் தொகை நூற்றயைம்பதாயிரத்தைத் தொட்டது. 1980 இன் சற்று முன்னரான காலப்பகுதியிலே ஏற்கனவே பத்தாண்டுகளின் மேல் வாழ்ந்து வதிவிடவுரிமை பெற்ற சிலர் ஈழத்துக் காலநிலையிலே வாழ விரும்பி ஒஸ்ரேலியாவிற்குச் சென்று குடியேறினர். 2000 இன் பின்னரிலிருந்து இன்றுவரை ஐரோப்பிய நாடுகளிலே வதிவிடவுரிமை பெற்ற தமிழர் பலர் பிரித்தானியாவிற்கு வரத் தொடங்கினர். இதற்கு ஆங்கிலமோகம், ஆங்கில மயக்கம், பிள்ளைகளின் எதிர்காலக் கல்விக்கு நல்லதென்ற முடிவு, பல்துறைச் சார்ந்த கல்வி வளம், தொழில்வாய்ப்புப் போன்ற இன்னோரன்ன பல காரணங்களைக் கூறலாம். மொத்தத்திலே ஐதாக வாழ்ந்து கரைந்து போவதிலும் பார்க்கச் செறிவாக வாழ்ந்து செம்மையுறுவது நல்லதே. அந்தவொரு காரணத்திற்காக இவ்வாறான இடப் பெயர்வுகளை ஆதரிக்கலாம்.

### மத வேறுபாடு

மனிதர் எனும்போது மதவேறுபாட்டிற்கு இடமில்லை. ஆயினும் மதங்களை வழி நடத்துவோர் எனத் தம்மை அழைப்போர் எல்லோருமே நல்லவர் என்றில்லை. இதனாலே காலத்திற்குக் காலம் மதங்கள் மதத்தோடு இயங்கியிருக்கின்றன.

தமிழர் எனும்போது மத பேதங்களுக்கு இடமில்லை. மதங்கள் அவரவர் மனதிற்கானவை. இறைவனை நாம் நம்பாமலும் வாழலாம். நம்பினாலோ இறைவனை வெளியே தேடக் கூடாது. எமக்குள்ளே தேடவேண்டும். ஆனால், அவரவர் சார்ந்த மதங்களுக்கு ஏற்பத் தனித்துவமான நடைமுறைகள் உள்ளன. சிலரோ, ஏற்கனவே தமது மதத்தில் உள்ளவர்கள் அம்மதத்தை நன்கு விளக்கியுள்ளாரா, மதக் கொள்கைகளை ஏற்றள்ளாரா என்பதைக் கவனிக்க மாட்டர்கள். ஏனை மதத்தவரின் துயரங்கள், இழப்புகள், குடும்பச் சச்சரவுகள், வதிவிடவுரிமைச் சிக்கல்கள் போன்றவற்றின்போது மடக்கிப் பிடித்துத் தமது மதத்திற்கு மாற்ற முயல்வர். சிக்கல்களிலிருந்து மீள உதவி செய்கிறார்கள் என்மது உண்மை எனினும், சில குடும்பச் சச்சரவுகளைப் பிரிவினை வரையிலே இட்டுச் செல்பவரும் இவர்களாகவே அமைந்துவிடுவதும் உண்டு. இவ்வாறான செயல்கள் பிரித்தானாயாவிலும் உண்டு.

பிரித்தானியத் தமிழருக்குள்ளே மதவேறுபாடு காரணமாகப் பூசல்கள் எழுவதில்லை. குழப்பம் விளைவிக்கும் சிலராலே சிறு முறுகல்கள் ஏற்படும் நிலைமைகள் தோன்றுவதுண்டு. நல்லவர் பலராலே இந்நிலைகள் அவ்வாறே தொடர்வதில்லை. பலரும் மிக ஒற்றுமையாகத் தமிழரென்ற முகவரியோடு ஒன்றாகிப் பல நல்ல செயல்களிலே ஈடுபட்டு வருகின்றனர். சில சமயத்தவர் மீது ஏனையோருக்கு ஐயப் பார்வை உண்டு. இது புதினமானதொன்றல்ல.

### சாதி வேறுபாடு

தமிழர் எனும்போது அவர்களுக்குள்ளே எந்தப் பேதங்களுக்கும் இடமிருக்கக் கூடாது. ஆயினும் பல நூற்றாண்டு காலமாக அமைந்த அடிமை வாழ்வு பலவிதமான பேதங்களை எமக்குள்ளே முன்னிலைப்படுத்தி அமைந்து விட்டது. மேனிலையில் உள்ளவர்களாகக் கணிக்கப்பட்ட ஒரு தொகையினரின் நலங்களை முன்வைத்தே இவை மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டன. என்றும் அழியவிடாமற் பாதுகாக்கப்பட்டன. இன்றைக்கும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் தமிழ் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்த தமிழரிடையேயும் சாதியைக் குறிக்கும் பெயர்கள் அதிகமாகப் பேணப்படுகின்றன. இந்நிலை பிரித்தானியாவிலும் தொடர்கிறது. தமிழ்நாட்டைப் போலே சாதி அடிப்படையிலான சங்கங்களும் மண்டபங்களும் இங்கு இல்லை. இந்தியாவிலே பள்ளிக்கும் தொழிலுக்குமான விண்ணப்பப் படிவங்களிலே சாதியும் பல இடங்களிலே கேட்கப்பட்டும் வருகின்றது. நன்மையோ சலுகையோ செய்வதற்கே இதனைக் கேட்கின்றோம் என்று கூறப்படும் காரணம் முதலாளித்துவ தத்துவம். இவை யாவும் பிழையானவை. சாதி என்பது இல்லாமற்போக வேண்டும் என்றால் மேற்கண்ட தன்மைகள்

யாவுமே அகற்றப்பட வேண்டும். ஈழத்திலே 1960 களிலே எமது தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் பலர் சாதி ஒழிப்பிலே ஈடுபட்டனர். ஓரளவு மாற்றங்கள் நடைப்பெற்றன. ஈழப்போரினால் விளைந்த நன்மைகளிலே ஒன்று சாதி ஒழிப்பு. ஈழத்தின் தேசியத்தலைவரின் தொலைநோக்குக் கொண்ட பல முயற்சிகளிலே இதுவும் ஒன்று. தமக்குள்ளே ஏற்றத்தாழ்வோடு பெறப்படும் விடுதலை உண்மையான விடுதலை அல்ல.

வெளிநாடுகளிலே வாழும் தமிழர்களிலே சிலர், தாம் சொந்த நாட்டைத் துறந்தபோது இருந்த நிலையிலேயே இன்றும் நிலைமைகள் அங்கிருக்கின்றன என்ற மயக்கத்தோடு உளர். இம்மயக்கத்தினாலே எதற்கும் சாதி பார்க்கும் பழக்கம் மிகச் சிலரிலே உண்டு. ஆனால், திருமணம் என்று வரும்போது அதுவும் பேசிப் பொருத்துவதாக அமைந்தால், சாதி பார்ப்பவர் பலர் உளர். இத்தன்மை காலப் போக்கிலே கரைந்துவிடும். காதலை ஊக்குவித்தலே இதன் வெற்றிக்கு வழி. இன்றைய உலகிலே காதலின் பொருளும் தன்மையும் வேறுபட்டவையாதலாலே காதலை ஊக்குவித்தலிலே சிக்கல்களும் உள்ளன. இன்றைய நிலை,

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர்
யாத்தனர் கரணம் என்ப

என்ற தொல்காப்பிய வரிகளை மீண்டும் நினைவுபடுத்துகின்றது. அரிசி கொதித்து அடுப்பிலே விழுந்தது என்று ஆகக்கூடாது அல்லவா! எனவே தமிழ்ப் பண்பாட்டிலே ஓரளவாவது ஒழுக முயன்றால் மட்டுமே உண்மைக் காதலும் அதனூடான ஏற்றத்தாழ்வற்ற தமிழினமும் அமைய வழியுண்டு.

மனிதரைக் கூறுபடுத்திப் பார்ப்பதும், அவ்வாறே ஆள்வதும் முதலாளித்துவ சிந்தனையின் வெளிப்பாடு. உண்மையான ஆன்மிகவாதியோ பொதுநலவாதியோ இவ்வாறு செய்யார். முறையான கல்வியறிவை மேம்படுத்துவதின் மூலமாகவும் எல்லோரும் சமம் என்பதனை நாம் உணரப் பண்ணலாம். புலம் பெயர் தமிழரின் அடுத்த சந்ததியினரை அவதானிக்கையிலே இது தெரிகின்றது.

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல- நெஞ்சத்தால்
நல்லம் யாம் என்ற நடுவு நிலைமையாற்
கல்வி அழகே அழகு.

எனவே வெறும் கல்வி இதற்கு உதவாது. தன் நெஞ்சத்திலே தான் உண்மையுள்ள ஆளாக உணரப்படும் வகையினைத் தேரவுள்ள கல்வியே உதவும். இது கிடைக்கின்றதா என்பதை இக்கட்டுரையின் அறிவுநிலை தொடர்பான பந்தியிலே பார்ப்போம்.

புலம் பெயர் தமிழரிடையே இன்னொரு விநோதமான சாதியை ஒத்த கூறுபாடும் உள்ளது. 1983 இன் முன்னர் வந்தவர்கள் உயர்ந்தவர், பின்னால் வந்த பட்டப் படிப்புள்ளோரும் பணவசதி கொண்டோரும் இரண்டாம் நிலையினர். ஏனையோர் சற்றுக் குறைந்தவர்கள். இவ்வாறானவை அவர்களுடைய அறியாமையை வெளிக்காட்டும் செயல் என்பதை அவர்களே அறிவதில்லை. இவை தாழ்ந்த உள்ளங்களினுடைய வெளிப்பாடுகள்.

கல்வி நிலை

யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு

என்று திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்னர் எழுதி வைத்தாலும் அடிமைத்தளையிலே அதனைச் செய்பவர் குறைவு. அதற்கான வசதிகளும் இல்லை. பொதுவாக மேற்கு, குறிப்பாகப் பிரித்தானியா, இதிலே முன்னணி வகிக்கின்றது. எவரும் எந்த வயதிலும் அதற்குரிய அடிப்படைத் தகுதியை ஏற்படுத்தினால் எந்தத் துறையிலும் கற்கலாம். சாந்துணையும் அதாவது சாகும் வரையும் படிக்கலாம்.

இங்கு இளையோரும் முதியோரில் பலரும் கல்வியைச் சிறந்த முறையிலே மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் கற்கவேண்டிய பருவத்திலுள்ள சிலர் தவிர்க்க முடியாத காரணங்களாலே கல்வியை விடுத்துப் பணமீட்டுவதிலே மட்டும் முயல்கின்றனர் என்பதும் உண்மையே. இது கவலை தரும் ஒன்று.

அறிவு நிலை

கற்றிலன் ஆயினும் கேட்க என்றான் வள்ளுவன். தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு என்றாள் ஔவை. இங்கு கல்வி என்பது எதனை என்பதுவும் அறிவு என்பது எதனை என்பதுவும் முக்கியமான கேள்விகள். பிரித்தானியா வாழ் தமிழரிலே பெரும்பான்மையானோர் குறிப்பாக இங்கு வந்த

முதற் சந்ததியினர் இக்கூற்றுகளை ஏற்பவராக இல்லை. பணமீட்டும் துறைகளிலே நிபுணத்துவம் பெற ஆன மட்டும் முயல்வர். பொதுவறிவுக்காக வாசிப்பவரும் கேட்பவரும் குறைவு. பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை என்றான் வள்ளுவன். இது பிரித்தானிய வாழ்விற்கு முழுக்கப் பொருந்தும் ஒரு கூற்று. எனவே, பலருக்கும் உழைப்பே கடவுள். பணமே அக்கடவுளினருள்.

இங்கு உருவாகிக் கொண்டிருக்கும் அடுத்த சந்நதியினர் பொதுவறிவையும் சேர்த்து முன்னெடுப்பவராக உள்ளமை மகிழ்வான செய்தி.

## தமிழ்க் கல்வி

தொடக்கத்திலே இங்கு வாழ்ந்த தமிழரிலே பலர் தம் பிள்ளைகளோடு தமிழிலே பேசுவதைக் தவிர்த்து வாழ்ந்தவராகவே இருந்துளர். இன்றும் அந்நிலை இருக்கும்போது அன்றைய இந்நிலையை எண்ணி வியப்பதற்கு ஏதுமில்லை.

1983 இன் பின்னர் பிரித்தானியாவிலே பல தமிழ்ப் பள்ளிகள் எழுந்தன. இன்று முப்பதுக்கு மேற்பட்டவை இயக்கி வருகின்றன. இவற்றிலே பல திறம்பட நடைப்பெற்று வருகின்றன. தேவைக்கு என்று ஏற்பட்டவை பல. போட்டியாலும் பிரிவாலும் ஏற்பட்டவை சில. இவற்றுக்கிடையே நெறிப்படுத்தப்பட்ட ஒரே பாடத் திட்டம் இன்றுவரை அமையாமல் இருப்பது பெருங்குறையே. இந்த முயற்சியிலே பலர் ஈடுபட்டனர். ஆனாலும், அவை திருவினை ஆகவில்லை.

இவ்வாறான தமிழ்ப் பள்ளிகளினூடாகவே கலைகள் தொடர்பான கல்விகளும் வளர்கப்படுகின்றன. இசை, இசைக் கருவிகள், நடனம், நாடகம் போன்ற யாவுமே வளர்க்கப்படுகின்றன. ஆனாலும் இங்கும் சில தன்மைகள் மனதிற்கு மிகவும் கவலை தருவனவே :

1. தமிழ் மொழியை ஆங்கிலத்தினூடு கற்பிப்பர். இது அறிவியலுக்கு ஒவ்வாத நெறி என்பதைப் பலர் அறிந்திலர்.

   அறியாமையை மன்னிக்கலாம். ஆனால், அறிந்தவர் சொல்லும்போது அதனை அப்படியே ஏற்காவிடினும்
   
   தாமாக ஆய்ந்தறிந்து ஆவன செய்யாமை குற்றமே! எந்த மொழியையும் அந்த மொழியிலே மட்டும்
   
   கற்கவேண்டும்.

2. தமிழ் மொழிக் கல்வியிலும் பார்க்க ஏனையவற்றுக்கே முக்கியத்துவம் தரப் படுகின்றது. அவ்வாறானாலும்

   அவற்றினூடாகத் தமிழை வளர்க்கலாம். ஆனால், அதிலேயும் கோட்டை விடுகின்றனர். பலர் பாடல்களையும்
   
   சுர வரிசைகளையும் ஆங்கிலத்திலே எழுதிக் கொடுப்பர். இது பெற்ற தாய்க்குச் செய்யும் பாவம் என்பதை
   
   ஏனோ இவர்கள் உணர்வதில்லை!

## கலைகள் தொடர்பான கல்வி

தனிப்பட்ட முறையிலே இசை, இசைக்கருவிகள், நடனம் போன்றவற்றைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் நூற்றுக் கணக்கிலே உளர். இவர்களிலே கலையோடு தமிழை வளர்ப்பவர் மிகச் சிலரே. ஆங்கிலத்தினூடாகத் தமிழ் கலைகளை வளர்க்க முயல்பவரே அதிகம். கலைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைத் தமிழுக்கும் தருவார்களேயானால் இரண்டுமே வளரும். நிலைக்கும். யாவரும் நன்மை பெறுவர்.

## மத வழிபாட்டு இடங்கள்

புலம்பெயர் தமிழரிலே பெரும்பான்மையோர் சைவர். அடுத்த நிலையிலே கிறிஸ்துவர். கத்தோலிக்கரும் கத்தோலிக்கர் அல்லாதவரும் இதிலே அடங்குவர். அடுத்ததாக முகமதியர். இந்தியாவிலிருந்து குடிபெயர்ந்த சிலர் வைணவர்களாக உள்ளனர். இன்று இது சிக்கலே அல்ல. அதுவும் பிரித்தானியாவிலே இது பெரிய பிரச்சனையே அல்ல. மேலும், எச்சமயத்தையோ உண்மையாகவே கற்றுணர்ந்து அதன்படி ஒழுகும் உண்மையான ஆன்மிகவாதிகளுக்கு இதிலே சிக்கல் இல்லை. அவர்கள் தொகையிலே மிகமிகக் குறைந்தவர். இவர்கள் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்றும் அன்பே சிவம் என்றும் திரிமூலரின் வழி நிற்பவர்கள். கடவுள் இல்லை என்பவரையும் ஏற்றுச் செல்லும் நெறியிலே வாழ்பவர். இங்குப் பலரும் சைவ வைணவ அடிப்படை அறிவு இல்லாதவர்களே. சடங்குகளிலும் வெளிவேடங்களிலும் மயக்கம் உள்ளவர்கள். ஐயனைக் காணவந்து ஐயரைக் கண்டதோடு

மகிழ்பவர்கள். கடவுளுக்குக் கையூட்டுக் கொடுத்துப் பேரம் பேசி வியாபாரம் செய்பவர்கள். இவர்களாலே மூட நம்பிக்கைகள் பெரிதும் வளர்கின்றன. ஆன்மிகம் தேய்கின்றது. ஆனாலும், இவர்கள் தம்முள்ளே எக்கடவுளர் பெரியவர் என்று அடிபடுவது இல்லை. தமக்குப் பணமும் பட்டமும் அதிகாரமும் தரவல்லரென்று சாமிக்கோலத்திலே வரும் எவர் சொல்லும் எக்கடவுளையும் வணங்குவர். அவ்வாறு சொல்லும் சாமியாரையும் வழிபடுவர். இனாலேயே கோயில்களிலும் வீடுகளிலும் எண்ணற்ற திருவுருவங்களும் படங்களும் இருக்கும். இறுதியிலே ஒன்றிலும் ஈடுபாடு இராது.

தமிழ் கிறிஸ்தவர்களிலேயேயும் பல வகையினர் உளர். இறைத் தூதரின் வழிப்படி அயலவனை நேசித்து அன்பு செய்பவர் பலருளர். வேற்று மதத்தவனைத் தனது மதத்திற்கு மாற்றினால் மட்டுமே சுவர்க்கம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே அயலவன் குடும்பத்திலே ஒருவரையாவது மதம் மாற்றி விட முயல்பவரும் உளர்.

தமிழ் முகமதியர்கள் மிகக் குறைவானவரே உளர். பொதுவாக இப்போது மேற்கிலே முகமதியர்களுக்குச் சிரமமான காலமே. உலகத்தின் தலைமையைத் தாமே ஏற்றதாக எண்ணிச் சண்டித்தனம் புரியும் அமெரிக்காவும் அதன் துணை நின்று தமது பழைய வல்லரசு நிலையைக் கற்பனையிலே எண்ணி மகிழும் பிரித்தானியாவும் அவர்களை எதிரிகளாகவே கருதுகின்றனர்.

எல்லாச் சமயத்தவரும் தத்தமது வழிபாட்டுத் தலங்களை அமைத்துள்ளனர். சைவர் கூடுதலாக இருப்பதாலே சைவக்கோயில்கள் இருபத்தைந்தின் மேல் உள்ளன. தமிழ்ப் பள்ளிகளைப் போலவே கோயில்களின் தொடக்கமும். தேவைக்காக என உருவாக்கப் பட்டவையும் உண்டு. போட்டி பொறாமைகளால் ஏற்படுத்தப்பட்டவையும் உண்டு. ஓரளவு ஆகமவிதிப்படி அமைந்தவை ஒன்றிரண்டே. ஏனையவை மடாலயங்களே. பொதுவிலே எல்லாக் கோயில்களும் வர்த்தகத் தன்மை கொண்டவையே. உண்மைச் சமயநெறியை மக்களிடையே ஊட்டுபவை மிகக் குறைவானவையே. தமிழை வளர்ப்பன அதனினும் குறைவானவை. வாரம் ஓரிரு நாட்கள் அடியவரைக் கொண்டு போற்றி அகவல் பாடிவிட்டுத் தமிழிலேயும் பூசை செய்துவருவதாகக் காட்டி ஏமாற்றும் போலிநிலை அதிகம் உண்டு. காரணம் கோயில்களை நடத்துபவர்களிலே பலருக்குச் சமயவறிவு, தமிழறிவு, மனித நேயம், கடவுள் நம்பிக்கை, சைவசித்தாந்தத் தெளிவு, ஆன்மிக வாழ்வு போன்றவை அதிக தூரத்திலே அமைந்துவிட்டமையே.

வர்த்தகம், வியாபாரம்

பிரித்தானியாவிலே எந்த இடத்திலும் மூலைக் கடைகள் இருக்கும். முன்னர் இவை பிரித்தானியராலே நடத்தப்பட்டு வந்தன. ஆப்பிரிக்க நாடுகளிலே புலம் பெயர்ந்திருந்த இந்தியர் இங்கு வந்தபோது அதிகமான மூலைக்கடைகளை அவர்கள் வாங்கினர். அவ்வாறு வாங்கியவர்களுடைய பிள்ளைகள் இளமையிலிருந்தே பிரித்தானியாவிலே படித்துப் படிப்பிற்கேற்ற தொழில் புரியத் தொடங்கினர். இக்காலக்கட்டத்திலே ஈழத்தவர் வரத் தொடங்கினோம். வந்தவர்களிலே பலரும் மூலக்கடைகளை வாங்கினர். இப்போது அவர்களுடைய பிள்ளைகள் படிப்பிலே ஈடுபடும் காலம். மிக விரைவிலே அவர்கள் கல்விக்கேற்ற தொழில் புரியத் தொடங்குவர். சிலருடைய நிலைமை இப்போதே மாறிவிட்டது. அவர்களுடைய மூலைக்கடைகளை இப்போது வருகை தரத் தொடங்கியுள்ள கிழக்கு ஐரோப்பியர் வாங்கத் தொடங்கியுள்ளனர். இன்றைய நிலையிலே ஐந்நூறு வரையான ஈழத்தவர் இவ்வாறான மூலைக்கடைகளையும் சிறு கடைகளையும் உணவுக் கடைகளையும் வைத்திருப்பவராக உள்ளனர்.

மிகப் பணக்காரராகவுள்ள சிலர் பெரிய அளவிலே வர்த்தகம் செய்பவர்கள். இவர்கள் அதிகமாக இறக்குமதி ஏற்றுமதித் துறையிலோ, எரிபொருள் நிலையங்கள் பலவற்றைக் கொண்டிருப்பவராகவோ அல்லது பெரியளவிலான அங்காடிகளை நடத்துபவர்களாகவோ உள்ளனர். மிகச் சிலர் கணினி நுட்பத்தோடு அமைந்த தொழிலதிபர்களாவும் உள்ளனர். இவர்கள் நூற்றுக்கணக்கான ஆட்களை வைத்துத் தொழில் நடத்துபவர்கள்.

ஊடகங்கள்

ஓரளவு நிலைத்தவையாகச் சில வாரவேடுகள், மாதவேடுகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பன உண்டு. இவையும் தேவைக்காகவும் போட்டி பொறாமைகளின் வெளிப்பாடாக ஏற்பட்டவையும் எனப் பலவுள்ளன. இவற்றிலே தொலைக்காட்சியையும் ஓரிரு சஞ்சிகைகளையும் தவிர ஏனையவை யாவும் இலவசமாகவே நடத்தப் படுகின்றன. இங்குள்ள வர்த்தகர்களின் விளம்பரப் பணத்தை நம்பியே இவை ஆயுளைக் காப்பாற்றுகின்றன. இதனாலே இடையிடையே தாமதித்து வெளிவருவனவும் முற்றாகவே இல்லாமற் போனவையும் பல. வழக்கம் போலவே தமிழையும் ஈழத்தையும் வாழவைக்க

உதவுவனவும் அவற்றைத் தாழ்வு படுத்துவதற்காகவே இயங்குபவையுமாக இரண்டு வகையினவாக இவை உள்ளன. இன்னொரு விதமாகப் பார்த்தால் பொதுநலம் சார்ந்து பலவுள. தன்னலம் சார்ந்தும் சிலவுள.

சங்கங்கள் மன்றங்கள்

இங்கு அதிகமாக இயங்கும் சங்கங்கள் ஈழத்துப் பாடசாலைகளுடைய பழைய மாணவருடையவை. இவற்றைவிட யாழ்பாணத்துத் தீவுப்பகுதிகளைச் சார்ந்தவர்களுடையவையும் சமயம், மொழி, இலக்கியம் முதலியவை சார்ந்தவையாகவும் பல சங்கங்கள் உள்ளன.

இங்குள்ள ஏனைய நிறுவனங்களைப் போலவே இவற்றுக்குள்ளும் ஆணவத்தின் செயற்பாடே கூடுதலாக உள்ளது. இதனாலே சில ஊர்களுக்கும் பாடசாலைகளுக்கும் இரண்டு சங்கங்களுள. எனினும், இவை தமது ஊர்களையும் பாடசாலைகளையும் மேம்படுத்தி வருகின்றன என்பது உண்மையே.

நூல்,இறுவெட்டு வெளியீடுகள்

கவிதை, சிறுகதை நூல்கள், பாடல் குறுவெட்டுகள் என்பன ஏராளம் வெளிவந்துள்ளன. தரமுள்ளவை மிகச்சிலவே. முதலாவதை அவசரப்பட்டு வெளியிடுதல். பொருத்தமான யாரிடமாவது காட்டித் தனது வெளியீடு பற்றிக் கருத்துப் பெற விழையாமை, பெற்ற கருத்துக் கசப்பாக இருப்பினும் உண்மையை உணராமை, எழுத்தாளர் ஆவதற்கு முன்னர் ஏனைய சிறந்த எழுத்தாளருடைய படைப்பகளை வாசியாமை போன்றவற்றாலேயே இக்குறைபாடுகள் ஏற்படுகின்றன. வெளிநாட்டுப் பணவசதி அறிவைப் பல வேளைகளிலே அடக்கி விடுவதுண்டு.

தாம் கற்ற கல்வி மூலம் மற்றையோரைக் குழப்புவோர்

இவ்வகையினர் எங்கும் உள்ளனர். எல்லா இனத்திலும் இருக்கின்றனர். தமிழினம் விதிவிலக்காக முடியுமா! யதார்த்தம், பெண்ணியம், பெண் விடுதலை, பிள்ளைகளின் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், நடுவு நிலைமை போன்ற சொற்களை இவர்கள் பிழையாகவே கையாண்டு வருவர். இவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை, பிள்ளைப் பருவச் சூழல், கட்டுபாடற்ற மதுபோதை, பொது மகளிருடனான தொடர்பு, பாலியற் சிக்கல்கள், ஆளுமைக் குறைபாடுகள், உடலமைப்பின் தொடர்பான தாழ்வுள்ளம் போன்றவற்றை ஆராய்ந்தாலோ பற்பல உண்மைகள் புலப்படும். தமிழிலே புலமை கொண்ட சிலர் ஏடுகளிலும் இணையத் தளங்களிலும் தாம் வெளியிடும் நூல்களிலும் வேண்டுமென்றே பிழையாக எழுதுவர். கேட்டாலோ யதார்த்தம் என்பர். சிறுகதை, நெடுங்கதை (நாவல்), நாடகம் போன்றவற்றிலே எவராவது பேசுவதாக வரும்போது மட்டுமே அவர்கள் கூறும் யதார்த்தம் ஏற்புடைத்து என்பதை ஏனோ ஏற்க மறுப்பர்.

மரஞ் செடியாக இருந்தாலும் பயன்தருவகையிலே பயிராக வளர்க்கையிலே அவற்றைக் கட்ட வேண்டிய இடத்திலே கட்ட வேண்டும். வெட்ட வேண்டிய இடத்திலே வெட்ட வேண்டும். நிமிர்த்த வேண்டிய இடத்திலே நிமிர்த்த வேண்டும். காட்டிலே தன்பாட்டிலே வளர்வனற்றுக்கே இவை இல்லை. பயன்தரு பயிர்ச் செய்கைக்கு வரம்பு, எல்லை, கட்டுப்பாடு போன்ற யாவும் தேவையானவை. மனித வாழ்க்கையும் ஒரு பயிர்ச் செய்கையே. பிழைகள் பிழைகளே. அவை யதார்த்தங்கள் எனவாகா. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பது விடுதலை அல்ல. கட்டுப்பாடும் ஒழுக்கமும் கொண்ட வாழ்வே நல்ல பயிர்ச் செய்கை. அப்போதே விளைச்சலும் அறுவடையும் நன்றாக அமையும்.

குறைபாடுகளும் திருந்தும் வழிகளும்

குறைபாடுகள் எவரிலும் உண்டு. தமிழர்க்கு எனத் தனித்துவமானவை சில உள்ளன. இதன் பொதுவான காரணிகளை நோக்கினாலோ உண்மைகள் சிலவற்றைப் புரிந்து கொள்ளலாம். கட்டுரையிலே அவ்வப்போது பல குறைபாடுகளைக் குறிப்பிட்டுள்ளேன். இங்கு அவற்றைச் சுருங்க நோக்குவோம்.

1. ஒற்றுமை இல்லாமையே முதற்காரணம். வெள்ளையருக்குத் தேவையற்ற அளவுக்குப் பணிந்தும் கைக்கட்டியும்

   சேவகம் செய்யும் நாம் எம்மவருக்கெனின் அடங்க மறுப்போம்.

   இதனைத் திருத்தவுள்ள வழி எமது உள்ளத்தைப் பக்குவப்படுத்துவதொன்றே.

2. கருத்து முரண்பாடுகளைத் தமக்கு மேலான தனிப்பட்ட முரண்பாடுகளெனக் கருதுதல்.

   இது அறிவிலே தெளிவற்ற நிலையும் தாழ்வு மனப்பான்மையும் கலந்த நிலையைக் காட்டும். கருத்து

முரண்பாடுகள் ஆரோக்கியமானவை. அதனை இரு பக்கத்தாரும் ஆய்ந்து தெளிந்து ஒருமுடிவை ஏற்று
ஒற்றுமையாக இயங்குவதேயாவரையும் வாழ வைக்கும். கருத்து முரண்பாடுகளைப் பெரிதுபடுத்தித் தாம்
சார்ந்த நிறுவனத்தையே கூறுபடுத்துவது மிகவும் பிழையான செயலாகும். போட்டியாக இன்னொன்றை
உருவாக்குவது அதனினும் பிழையானதாகும்.

3. பொதுநலம் சார்ந்த சேவை மனப்பான்மை இல்லாமை.

இது அறிவிலே தெளிவற்ற இயல்பும் கல் நெஞ்சத்தின் வெளிப்பாடும் கலந்த நிலை. மனிதத்தை மதிக்கும்
பழக்கத்தை உருவாக்கப் பழகுவதே இதனைத் திருத்தும் ஒரே வழி. நாற்பது வயதிற்குப் பின்னராவது
பொதுச் சேவை செய்யத் தொடங்காதவர் வாழ்வை வீணாக்கியவரே.

4. ஈழவிடுதலைக்கு உதவாத நிலைமையும் எதிர்ப்புத் தன்மையும்.

இதுவும் அறிவிலே தெளிவிற்ற இயல்பும் கல் நெஞ்சத்தின் வெளிப்பாடும் கலந்த நிலையே. குறிப்பாக
அரசியல் ஞானமில்லாததும் இன்றைய உலகச் சூழலைப் புரிய மாட்டாததும் தன்னலம் மட்டுமே
மிகுந்ததுமான தன்மையே இந்த நிலையைத் தரும். இன்னொருவருடைய எல்லாமே ஒருவருக்குச் சரியாகப்
படுமென்று இல்லை. அதுபோல எந்த நிறுவனத்தினதும் எக்காலத்திலுமான எல்லாமே எமக்குப் பொருந்தும்
என்றும் இல்லை. ஆனாலும் அடிப்படைக் குறிக்கோள், அக்குறிக்கோளை அடைய அந்நிறுவனத்தினர்
எடுக்கும் முயற்சி, அதனாலே விளையும் பொதுநலம் போன்றவற்றை நாம் எடைபோடப் பழக வேண்டும்.
எமது எந்தச் செயலும் அந்தப் பொதுநலத்தைப் பாதிக்கக் கூடாது. இங்கு நிறுவனம் எனும்போது அது எமது விடுதலை இயக்கத்தையும் உள்ளடக்கும். தனிப்பட்ட நட்ட நயங்களுக்காக அனைத்துத் தமிழரினதும் பொதுநலம் பாதிக்கப்படக்கூடாது. எம்மாலான பொருளுதவியையும் உடலுதவியையும் நாம் செய்யவே வேண்டும். உடலுதவி எனும்போது பரப்புரைகள், கவனயீர்ப்புப் போராட்டங்கள், ஊர்வலங்கள், பொருள் சேர்க்கும் நடவடிக்கைகள் போன்றவற்றிலே உதவுதலையும் பங்குபற்றுதலையும் குறிக்கும்.

அரசியல்

இருபத்தியோராம் நூற்றாண்டிலேயே கூடுதலான தமிழர் பிரித்தானிய அரசியலிலே பங்கு கொள்ளத் தொடங்கியுள்ளனர். அதற்கு முன்னர் மிகச் சிலரே பங்கு கொண்டிருந்தனர். இங்குள்ள முக்கியமான கட்சிகள் மூன்றிலும் இப்போது பலர் உறுப்பினராகி உழைத்து வருகின்றனர். நகராட்சி மன்றங்களிலே உறுப்பினராகப் பலரும் வெல்லுமளவிற்கே இப்போதைய நிலை உள்ளது. விரைவிலே இந்நிலை உயரலாமென எதிர்வு கூறப்படுகின்றது.

வருங்காலம்

இந்த ஆண்டு ஈழம் அமையும் ஆண்டு. போரிலே பெறும் வெற்றி ஈழ மீட்பு அல்ல. அது வெறுமனே நிலமீட்பு என்றுகூட அல்ல. மொழி மீட்பு, பண்பாட்டு மீட்பு மொத்தத்திலே தமிழருடைய வாழ்வின் மீட்பு என்பன நிகழ்ந்தாலே ஈழம் மீட்கப்பட்டதாகும். அப்போதே ஈழத்தவர் விடுதலை பெற்றவர் ஆவர். இந்நிலை ஏற்படப் பலவாண்டுகள் ஆகும்.

இலங்கைத் தீவிலே ஈழம் எனும் எமது பகுதியின் இறைமை இவ்வாண்டு நிலைநாட்டப்படுவதைத் தொடர்ந்து வரும் காலம் மிக முக்கியமானது. எல்லாம் இழந்த நிலையிலே வாழும் மக்களின் உச்சக்கட்ட அழிவின் நடுவிலே உதிக்கும் நாடு. தன்னலம் எள்ளளவும் இல்லாத தயாள குணம் படைத்த தமிழருடைய செல்வமும் முயற்சியுமே ஈழத்தை நன்கு உயர்த்தி வாழ வைக்கும்.

தள்ளா விளையும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

பிரித்தானியாவிலே உள்ள பலரும் உலகத் தமிழரோடு இணைந்து தன்னலமற்ற முறையிலே ஒற்றுமையாக இயங்கினால் உலகிலே தமிழ் நிலைக்கும். தமிழ்ப் பண்பாடு பேணப்படும். இவற்றைப் பாதுகாக்கும் ஈழம் செழிக்கும்.

<u>கட்டுரையாளர் பற்றிய குறிப்பு</u>

ஏறத்தாழ இருபத்தியேழு ஆண்டுகளாக நிலத்துள்ளான நெய் அகழ்வுப் பெற்றோலிய நிர்மாணத் துறையிலே பொறியியலாளனாகத் தொழில் பார்த்து வருகிறார். எட்டாண்டுகள் மத்திய கிழக்கிற் கழிந்தவர் இங்கிலாந்திலே இதுவரை பத்தொன்பது ஆண்டுகள் கழிந்துள்ளார்.இலண்டனிலே 1998 இல் இருந்து சைவசித்தாந்தத் தமிழ்ப்பள்ளி அமைத்து நன்மனங்கொண்ட பலருடைய உதவியோடு தமிழ் மொழியையும் மூட நம்பிக்கைகளைக் களையும் விருப்பாலே சைவ சித்தந்தத்தையும் கற்பித்து வருகின்றார்.